ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2022.07.29 |

**ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 யூலையில் 60.8 சதவீதத்தைப் பதிவுசெய்தது**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 யூனின் 54.6 சதவீதத்திலிருந்து 2022 யூலையில் 60.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான பணவீக்கத்தின் இவ்வதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் மாதாந்த அதிகரிப்புக்களினால் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 யூனின் 80.1 சதவீதத்திலிருந்து 2022 யூலையில் 90.9 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 யூனின் 42.4 சதவீதத்திலிருந்து 2022 யூலையில் 46.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2022 யூலையில் 4.51 சதவீதமாகப் பதிவாகியது. இதற்கு, முறையே 2.31 சதவீதமாகவும் 2.20 சதவீதமாகவும் காணப்பட்ட உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தது. அதற்கமைய, போக்குவரத்து (பெற்றோல், டீசல், விமானப் பயணச்சீட்டுக் கட்டணங்கள் மற்றும் பேருந்துக் கட்டணம்), உணவகம் மற்றும் விடுதிகள் மற்றும் வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (திரவப்பெற்றோலிய வாயு, விறகு மற்றும் பராமரித்தல்/ மீள்கட்டுமானம்), ஆகிய துணை வகைகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களைப் பிரதான காரணமாகக் கொண்டு உணவல்லா வகையினுள் உள்ள பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. மேலும், உணவு வகையினுள் பால்மா, அரிசி மற்றும் உடன் மீன், என்பவற்றின் விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், காய்கறிகள், தெங்கு மற்றும் தேங்காய் எண்ணெய் என்பவற்றின் விலைகள் மாதகாலப்பகுதியில் குறைவடைந்தன.

அதேவேளை, ஆண்டுச் சராசரி பணவீக்கம் 2022 யூனின் 18.4 சதவீதத்திலிருந்து 2022 யூலையில் 23.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 யூனின் 39.9 சதவீதத்திலிருந்து 2022 யூலையில் 44.3 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 யூனின் 13.3 சதவீதத்திலிருந்து 2022 யூலையில் 16.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் | 2022 யூன் | 2022 யூலை |
|---|---|---|
| **முதன்மை** | | |
| சுட்டெண் பெறுமதி | 220.2 | 230.1 |
| மாதாந்த மாற்றம் (%) | 12.8 | 4.5 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 54.6 | 60.8 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 18.4 | 23.1 |
| **மையம்** | | |
| சுட்டெண் பெறுமதி | 200.2 | 208.0 |
| மாதாந்த மாற்றம் (%) | 9.5 | 3.9 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 39.9 | 44.3 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 13.3 | 16.7 |

**கொநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)**




**கொநுவிசு இல் மாதாந்த சதவீத மாற்றத்திலான பங்களிப்பு**




---

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2013=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணைவகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) ரீதியான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் தளம்: (2013=100)**

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆண்டு** | **மாதம்** | **கொழுநுவி சுட்டெண்** | **கொழுநுவிசு (மைய)** | **கொழுநுவி சுட்டெண்** | **கொழுநுவிசு (மைய)** | **கொழுநுவி சுட்டெண்** | **கொழுநுவிசு (மைய)** | **கொழுநுவி சுட்டெண்** | **கொழுநுவிசு (மைய)** |
| 2021 | யூலை | 143.1 | 144.1 | 0.5 | 0.7 | 5.7 | 3.7 | 4.2 | 3.1 |
| | ஓகத்து | 143.5 | 144.6 | 0.3 | 0.3 | 6.0 | 4.1 | 4.3 | 3.2 |
| | செத்தெம்பர் | 144.1 | 146.0 | 0.4 | 1.0 | 5.7 | 5.0 | 4.5 | 3.3 |
| | ஒத்தோபர் | 146.9 | 147.9 | 1.9 | 1.3 | 7.6 | 6.3 | 4.8 | 3.6 |
| | நவெம்பர் | 150.7 | 149.4 | 2.6 | 1.0 | 9.9 | 7.0 | 5.3 | 4.0 |
| | திசெம்பர் | 154.7 | 151.3 | 2.7 | 1.3 | 12.1 | 8.3 | 6.0 | 4.4 |
| 2022 | சனவரி | 158.4 | 154.1 | 2.4 | 1.9 | 14.2 | 9.9 | 6.9 | 5.0 |
| | பெப்புருவரி | 160.1 | 155.7 | 1.1 | 1.0 | 15.1 | 10.9 | 7.9 | 5.7 |
| | மாச்சு | 164.9 | 159.4 | 3.0 | 2.4 | 18.7 | 13.0 | 9.1 | 6.5 |
| | ஏப்பிறல் | 180.2 | 172.4 | 9.3 | 8.2 | 29.8 | 22.0 | 11.3 | 8.1 |
| | மே | 195.2 | 182.9 | 8.3 | 6.1 | 39.1 | 28.4 | 14.2 | 10.2 |
| | யூன் | 220.2 | 200.2 | 12.8 | 9.5 | 54.6 | 39.9 | 18.4 | 13.3 |
| | யூலை | 230.1 | 208.0 | 4.5 | 3.9 | 60.8 | 44.3 | 23.1 | 18.7 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்